# ஆறுமுகம் நாவலில் பெண்களின் நிலை

***க. சிரஞ்சீவி***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி

***முனைவர் ஜோ. ஜோசப்பின் ஜூலியட்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சாயர்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6435

***ஆய்வுச் சுருக்கம்***

*ஆறுமுகம் என்னும் நாவல் உணர்த்தும் உள்முரண்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் வசிக்கும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையானது நகர்புறத்துக்கு இடம்பெயர்வதால் ஒழுக்கம் தவறுவதன் காரணமாக தனபாக்கியமும் அவளது மகன் ஆறுமுகமும் எதிர்கொள்ளும் வாழ்வியல் அவலங்களை எடுத்தியம்புகிறது. இமையம் தன் நாவல்களின் வாயிலாக எவ்வாறு சமூக எழுத்தாளராக பரிணமிக்கிறார் என்றும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. ஆறுமுகம் நாவலின் வாயிலாக விளிம்புநிலை மாந்தரான தன் கணவனை இழந்த தனபாக்கியம் தன் மகனின் கல்வி மற்றும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நகர்புறத்திற்கு இடம்பெயர்வதால் தனபாக்கியத்தின் குடும்பம் சிதைவுறுவதை எடுத்துரைக்கிறார்.*

## முன்னுரை

இமையம் என்ற புனைப்பெயரில் எழுதும் வெ. அண்ணாமலை 1964-ம் ஆண்டு மார்ச் 10-ம் தேதி கழுதூரில் பிறந்தார். இவரது மனைவி ச. புசுபவள்ளி. குழந்தைகள் கதிரவன் மற்றும் தமிழ்ச்செல்வன். முதுகலைப்பட்டம் பெற்று பள்ளிக்கல்வித் துறையில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் சமூகம் குறித்த புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நூல்கள் என பலதரப்பட்டவை இவர் எழுதியவையாகும் இவரது முதல் நாவல் கோவேறு கழுதைகள் (1994). சாகித்திய அகாதெமிப் பரிசுபெற்ற நாவலான செல்லாத பணம் ஒரு முக்கியமான நாவலாகும் (2020). இக்கட்டுரை இமையம் அவர்களின் ஆறுமுகம் நாவலில் வெளிப்படும் பெண்களின் வாழ்க்கை நிலைகளை விளக்கிக் காட்டுவதாக அமைகிறது.

## ஆறுமுகம்

இமையம் 1999-ல் படைத்துள்ள ஆறுமுகம் நாவல் அதன் பெயரில் ஆண்பாலைக் கொண்டிருந்தாலும் இந்நாவல் முன்னிறுத்துவது பெண்களைப் பற்றிய கதையைத்தான். தனபாக்கியம், சின்னப்பொன்னு, பாக்கியம், வசந்தா, அபிதா, புஷ்பாமேரி என பல பெண்களின் வாழ்க்கை நிலைகளை ஆறுமுகம் என்கிற மைய பாத்திரத்தின் வழி மிக நுணுக்கமாக பேசுகிறது.

இந்நாவல் ஆறுமுகம் தன் தாயிடம் குற்றமாக நினைத்து ஒதுங்கிய ஒன்று பரந்த மனித வாழ்க்கையில் அவனுக்கு உணர்த்தும் புரிதல்கள் தான் இந்நாவலின் அம்சமாக திகழ்கின்றது.

### கதையமைப்பு

புத்துறை எனும் கிராமத்தில் வாழும் முத்துக்கிழவன் நொச்சி குச்சிகளில் கூடை முடைந்து சந்தையில் விற்பவன் அவனது மகள் தனபாக்கியம் பக்கத்து ஊரான கிருஷ்ணாபுரத்து இராமனுக்கு திருமணம் செய்து கொடுத்து அங்கே அனுப்புகிறான். அவர்களின் மகன் ஆறுமுகம். இராமன், கிராம அதிகாரங்களைக் கையில் வைத் திருக்கும் நாயுடு குடும்பங்களில் கூலி வேலை செய்பவன். பாண்டிச்சேரியின் கிழக்கில் செயல்பட்டு வந்த ஆரோவில் என்ற நிறுவனத்திற்கு இராமன் வேலைக்குச் செல்கிறான். திடீரென்று இராமன் வேலையிடத்தில் நடந்த விபத்தில் இறந்து போகிறான். தனபாக்கியம் சிலகாலம் தன் தந்தையின் ஊரிலும், கணவனின் வீட்டிலும் தனிமையில் வாழ்கிறாள். இராமனின் இறப்புக்கு நிதியுதவியும் தனபாக்கியத்துக்கு வேலையும் ஆரோவில்லில் கிடைக்கிறது. ஆறுமுகத்துக்குத் தரமான கல்வி கிடைக்கும் பொருட்டு மகனோடு பாண்டிச்சேரிக்கு குடிபெயர்கிறாள். அவளுடைய குடிபெயர்வில் சந்தேகம் கொண்ட முத்துக்கிழவன் அவளுடன் பேசாமலேயே தனிமையில் வாழ்ந்து இறுதியில் தற்கொலை செய்துகொள்கிறார். ஒருநாள் தனபாக்கியம் ஜெரி ஆல்பெட்டுடன் தனிமையில் நெருங்கி இருக்கும் காட்சியை கண்ட ஆறுமுகம் வீட்டை விட்டு வெளியேறுகிறான். வீட்டைவிட்டு ஓடிவந்த ஆறுமுகம் சைக்கிள் ரிக்சா ஓட்டும் தருமமூர்த்தியால், பாலியல் தொழிலாளியான சின்னப்பொண்ணுவின் அன்பிலும் பராமரிப்பிலும் வாழ்கிறான். பின்னர் மேட்டுப்பாளைய தொழிற் பேட்டையில் வசந்தாவுடன் குழந்தை தொழிலாளியாகவும், பின்பு சமையல்காரர் குப்புசாமியின் உத வியாளனாகவும் வேலை செய்கிறான். சின்னப் பொண்ணுவின் இறப்பிற்கு பின்பு பாக்கியத்தின் கறிக்கடையில் வேலைசெய்யும் ஆறுமுகம் அபிதா என்ற பாலியல் தொழில் செய்பவளை விரும்புகிறான். ஆனால் எதிர்பாராத விதமாக அவன் தன் தாயை ஒரு விபச்சார குடிசையில் மீட்டெடுத்தாலும் அவள் பித்துபிடித்த நிலையில் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிடுகிறாள். தனபாக்கியம், சின்னப் பொண்ணு, பாக்கியம், வசந்தா, அபிதா, புஷ்பாமேரி எனப் பல பெண்களின் வாழ்க்கை நிலைகளை ஆறுமுகம் எனும் நாவல் படம்பிடித்துக் காட்டுகிறது.

### கட்டாயத் திருமணம்

பெண்ணடிமைக் கூறுகளில் மிகவும் கொடுமையானது கட்டாயத் திருமணம். இது பெண்ணின் உணர்வுகளை ஒடுக்கும் நிலை ஆகும். கட்டாயத் திருமணம் என்பது ஆண் அல்லது பெண் அல்லது இருவருடைய ஒப்புதலையும் பெறாது நடத்தப்பெறும் திருமணம் ஆகும். கட்டாயத்திருமணத்தால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் பெண்களே.

ஆறுமுகம் நாவலில் தன் மகள் தனபாக்கியத்திற்கு கட்டாயத் திருமணம் செய்து வைக்கிறார் முத்துகிழவன். இதனை,

> **“பாஞ்சி வருசமா செடி வளக்கற மாறி வளத்தன். தாயி மொல எதுன்னுக்கூட அதுக்குத் தெரியாது, ஆரம்பத்துல சண்டித்தனம் செஞ்சாலும் பின்னால தொட சொகம் தெரிஞ்சா எல்லாம் சரியாயிரும்’[1]**

என்ற கிழவனின் வார்த்தை புலப்படுகிறது.

### புலம்பெயர்தல்

மனிதன் தனது தொடக்க காலத்தில் இருந்தே புலம்பெயர்ந்து வாழுதலைக் கடைபிடித்து வந்தான். பறவைகள், விலங்குகள், போன்றவை உணவிற்காகவும், நீருக்காகவும், வாழிடங்களுக்காகவும் இயற்கையாக

இடம் பெயர்தல் உண்டு. இத்தகைய புலம்பெயர்தலைப் "பிரிவு" பற்றிக் குறிப்பிடும் போது தொல்காப்பியர் கூறுவதாவது

**"ஓதல் பகையே துதிவை பிரிவே"[2]**

**(நூற்பா. 27)**

என கல்விக்காகவும், பகைப்புலம் நோக்கி படையெடுக்கும் காரணமாகவும், தூதுவராகச் செல்வதற்காகவும் புலம் பெயர்தல் உண்டு. இங்கே தனபாக்கியம் தன் மகன் ஆறுமுகத்தின் கல்விக்காக கிருஷ்ணபுரத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு இடம்பெயர்கிறாள். இதனை,

**"என் மவன் படிக்கனும், அவன் அப்பனாட்டம் கையெயித்துப் போடத் தெரியாதவனா, இன்னொருத்தனுக்கு முட்டியடிக்கவுடமாட்டான்"[3]**

என்ற தனபாக்கியத்தின் வாக்கியம் புலப்படுத்துகிறது. இடம்பெயர்ந்தவுடன் தனபாக்கியத்தின் குடும்பமே சிதைவுறுகிறது. இதனை,

**"காத்துல மேகம் கலஞ்சாப்ல என் குடும்பம் கலஞ்சிப்போச்சி"[4]**

என்ற தனபாக்கியத்தின் புலம்பல் புலப்படுத்துகிறது.

## நகரமயமாதல்

நகர்ப்புற வாழ்க்கை என்பது பெண்களை ஒரு வகையில் சுதந்திரமானவர்களாக மாற்றுகிறது. அதே நேரத்தில் பெண்களை இரட்டை உழைப்புக்கு ஆளாக்குகிறது. பெண்களை வேலைக்கு எடுப்பதே குறைந்த சம்பளம் கொடுக்கலாம். பாலியல் சீண்டலும் செய்யலாம். இதுதான் நகரமயமாதல் பெண்களுக்கு தந்த வெகுமதி. இதைப் போல நாவலிலும் மேட்டுப்பாளையம் தொழிற்பேட்டையில் வேலைசெய்யும் வசந்தா அங்கு பணிபுரியும் மேலதிகாரியால் பாலியல் தேவைக்குப் பயன்படுத்தப் படுகிறாள். இதனை,

**"பொம்பளென்னா எங்கேயும் இப்படித்தான்"[5]**

என்ற வசந்தாவின் வாக்கியம் பறை சாற்றுகிறது.

## விலைமகளிரும் மறுவாழ்வும்

பெண்கள் விலைப் பொருளாக நிர்ணயிக்கப்படுவது இன்றயை சூழ்நிலையில் சமூகத்தில் புரையோடிக் கிடக்கிறது. பெண்கள் வறுமையின் காரணமாகவே பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இந்நாவலில் செக்குமேட்டில் வசிக்கக்கூடிய பெண்கள் அனைவருமே வறுமையின் காரணமாக இத்தொழில் ஈடுபட்டுள்ளார்கள். இத்தொழிலிருந்து சின்னப்பொண்ணு மீள முயற்சித்ததை

**"ஆறுமுகம் வெளியேப் போயி நில்லு எந்த நாயாவது அங்க வந்து நின்னா ஒன் செருப்பால அடிச்சித் தொரத்து".[6]**

என்ற சின்னப்பொண்ணுவின் வாக்கியத்தின் மூலம் படைப்பாளர் விளக்குகிறார்.

## முடிவுரை

பெண்களின் உலகம் குடும்பம் எனும் எல்லைக்குள் கட்டுப்பட்டு விடுகிறது. பெண்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களைத் துடைக்க முன்வர வேண்டும். கட்டாயத் திருமணம் செய்து வைத்து பெண்ணடிமைப் படுத்துவது, புலம்பெயர்வதால் மாறுபடும் பெண்களின் சிந்தனைப் போக்கு, நகரமயமாதலால் பெண்களுக்கு ஏற்படும் அநீதி, வறுமையின் காரணமாக விலைப்படுத்தப் படும் பெண்களின் வாழ்க்கை நிலை பற்றிய உண்மைகளும் இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. இமையம், ஆறுமுகம், க்ரியா பதிப்பகம், திருவான்மியூர் சென்னை. ப. 7
2. தொல்காப்பியம் பொருளதிகாரம். ப. 14
3. மேலது ப. 64
4. மேலது ப. 229
5. மேலது ப. 125
6. மேலது ப. 112